

# மதத்தின் பெயரால் நிகழ்ந்த அநீதி!

சத்குரு ஜக்கி வாசுதேவ் சிறப்புப் பேட்டி

த.செ.ஞானவேல்

"டேய், சீக்கிரம் ஷூ போடு... குரு வந்துடுவார்" என்று சக நண்பர்களைத் துரிதப்படுத்துகிறான் ஒரு பழங்குடியின சிறுவன். எங்கும் உற்சாகப்பூக்கள் மலர்ந்து கிடக்கின்றன அங்கு. வெள்ளையங்கிரி மலையடிவார கிராமத்தின் குழந்தைகளுக்கு, குரு என்பவர் விளையாட்டுத் தோழர். டிராக் சூட், போனிடெய்ல், ரேயான் கிளாஸ் என்று படு ஸ்டைலாக வந்து இறங்குகிறார் ஜக்கி வாசுதேவ். உலகம் முழுவதும் அருகில் நின்று பார்த்து ஒரு வார்த்தை பேசிவிடவேண்டும் என்று லட்சக்கணக்கானவர்கள் ஏங்கும் 'சத்குரு ஜக்கி வாசுதேவ்', சிறுவர்களுடன் கால்பந்து விளையாடிக்கொண்டிருக்கிறார். யாரும் சுலபத்தில் நுழைந்துவிட முடியாத கர்ப்பக்கிரகங்களிலும், ஜோசியங்களிலும் மாட்டிக்கொண்ட இந்திய ஆன்மிகத்தை மக்களிடம் கொண்டு சேர்க்கும் முயற்சியில் தன்னைக் கரைத்துக்கொண்டிருக்கிறது ஜக்கி வாசுதேவின் ஈஷா ஃபவுண்டேஷன்.

'மரம் நடலாம் வாங்க, ஏழைப் பிள்ளைங்களுக்கு பள்ளிக்கூடம் கட்டலாம் வாங்க, கிராம மக்களுக்கு மருத்துவம் பார்க்கலாம் வாங்க' என்று மக்களை நோக்கி வருகிறவர்மீது தானாக மரியாதை வருகிறது. அணுசக்தி ஒப்பந்தம், மதத் தீவிர வாதம், கல்விமுறை, இட ஒதுக்கீடு போன்ற அதிரடியான கேள்விகளை மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் அவர் எதிர்கொள்ளும் அழகேதனி. சர்ச்சையான கேள்விகளுக்கும் அர்த்தமுள்ள பதில்களை அச்சமில்லாமல் அவர் சொல்லும்போது சீடர்கள் பதறுகிறார்கள். குரு சிரிக்கிறார். கொஞ்சும் தமிழும் கொட்டும் ஆங்கிலமுமாக தொடர்கிறார் ஜக்கி வாசுதேவ்.

**சுற்றுச்சூழல், கல்வி, மருத்துவம் போன்ற பணிகளில் அதிக அக்கறை காட்டுகிறீர்களே?**

பூமியில் வாழுற எல்லாருக்கும் அக்கறை இருக்கணும். வாழும் நிலம் நல்லா இருந்தாதான் மக்கள் நல்லா இருக்க முடியும். ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு ஏழ்மையால் கல்வி கிடைக்காத அநீதி இன்னும் தொடருது. இந்தியாவில் எந்தக் கிராமத்திற்குப் போனாலும் 90 சதவீதம் மக்களுக்கு பழைய சோறும், பச்சை மிளகாயும், ஈர வெங்காயமும்தான் இன்னமும் உணவு. கார்போஹைட்ரேட் மட்டுமே மூன்று வேளையும் உடலுக்குக் கிடைப்பதால் 48% பேருக்கு சர்க்கரை நோய் இருக்கு.

உடல் நன்றாக இல்லாமல் போனால் மனசு நல்லா இருக்காது. புத்தி நல்லவிதத்தில் யோசிக்காது. லட்சக்கணக்கான மக்கள் பசியாலும், நோயாலும் துன்பப்படுகிறார்கள். எங்கோ தொலைதூரத்தில் மக்கள் இறந்துபோனால், பெரும்பாலான மற்றவர்களுக்கு அது வெறும் செய்தி. தினம் தினம் பட்டினியால் பலர் செத்துக்கொண்டிருக்கும் துயரம் நம்மை வந்தடைவதே இல்லை. இது வெளியே தெரியாத, வராத அவலம். அவர்கள் மீது அக்கறை நம்ம எல்லாருக்கும் வரணும்.

**பெரும்பாலான மக்கள் சாப்பாடே இல்லாமல் இருப்பதாக நீங்களே சொல்றீங்க. இந்தச் சூழலில் மக்களுக்கு ஆன்மிகம் தேவையா?**

ஆன்மிகம் இல்லாததால்தான் இன்னும் மக்களுக்கு சாப்பாடு இல்லை. உள்சக்தி இல்லை. உள்ளே புத்துணர்வு இல்லாமப் போயிட்டா, எதுவும் செய்ய முடியாது. வயசான பிறகு ஆன்மிகத்தைப் பார்த்துக்கலாம்னு நினைக்கிறோம். 10 வயசுல ஆன்மிக உணர்வு வந்தால் வாழ்க்கையிலும் மாற்றம் வரும். தன்னைப் பற்றியோ, தன்னைச் சுற்றி இருக்கிறவங்களைப் பற்றியோ எதுவும் தெரியாமல் இருக்கிறார்கள். இந்த அறியாமையால்தான் அவர்களின் எல்லாப் பிரச்னைகளும் இன்னும் தீராமல் இருக்கு. ஆன்மிகம் மக்களை அறியாமையிலிருந்து மீட்டெடுக்கும் அற்புதம். தன்னை உணரும் ஆன்மிகம் மக்கள்கிட்ட வந்துட்டா, யாரும் சுலபத்தில் ஏமாத்த முடியாது.

**மதம், ஆன்மிகம் போன்றவற்றினால்தானே மக்களிடம் அறியாமை பரப்பப்படுகிறது; அநீதி நிகழ்த்தப்படுகிறது. அதுவே எப்படி தீர்வாகும்?**

இந்த லிஸ்ட்டில் ஆன்மிகத்தை ஏன் சேர்க்கறீங்க? மதம் என்பது நம்பிக்கை. ஆன்மிகம் என்பது தேடல். மதத்தின் பேரால் அநீதி நடந்திருக்கிறது. மதநம்பிக்கை கடவுளுக்கு ஒரு உருவம் கொடுத்து, நாலு கை இருக்கும்னு சொன்னாலும் நம்பும். கற்பனைகளை அப்படியே நிஜம் என்று நம்பும். அரசியல்வாதி ஒன்றை நம்புகிறார். மதவாதி ஒன்றை நம்புகிறார். மற்றவர்களின் நம்பிக்கைகள் பற்றி அவர்களுக்கு எவ்வித அக்கறையும் இல்லை. ஒருவரின் நம்பிக்கை இன்னொருவரைப் பிரிப்பதாக இருக்கிறது. இருவேறு நம்பிக்கைகள் நிச்சயம் ஒரு நாள் சண்டையில்தான் முடியும். அதுதான் இங்கே நடக்கிறது. என்னிடம் ஒருவர், 'நான் ஒரு நாத்திகன், கடவுள் மீது நம்பிக்கை இல்லை' என்றார். 'நானும் அப்படித்தான்' என்று சொல்வது எனக்கு சுலபமாக இருந்தது. ஒன்றை நம்புவது ஆன்மிகம் இல்லை. தேடுவது ஆன்மிகம். அதற்கும் அநீதிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.



**பத்து வருடங்களுக்கு முன்பு சாதிக்க வேண்டும் என்று நினைத்த அத்தனை விஷயங்களையும் நீங்கள் இப்போது சாதித்திருக்கிறீர்களா?**

என் கனவுகள் பூர்த்தி செய்யப்படாமலேயே நான் இறந்துபோவேன் என்று தெரியும். இந்த ஆயுளுக்குள் நிறைவேறக்கூடிய கனவுகளை நான் காண்பதில்லையே! என் காலத்திலேயே எல்லாம் நடந்துவிட சாத்தியமில்லை. என் கனவுகள் நிறைவேறுமா என்கிற பயம் எப்போதுமே எனக்கில்லை. இந்தக் குறைந்த ஆயுளுக்குள் நிறைவேற்றிவிடக்கூடிய மிகக்குறைந்த லட்சியங்களையோ, கனவுகளையோ வைத்துக்கொள்ள எனக்கு விருப்பம் இல்லை. என் கண்முன்னால் எல்லாவற்றையும் நிறைவேற்றி திருப்தி அடைய வேண்டும் என்று நான் பேராசைப்படவும் இல்லை.

தனிப்பட்ட மனிதர்களின் மனத்திருப்திக்கானதல்ல லட்சியம். ஒரு வாழ்நாளில் சாதிக்க முடியாது என்று தெரிந்தேதான் முடிவில்லாத கனவுகளை, லட்சியங்களை வைத்திருக்கிறேன். ஆயிரம் ஆண்டுகளில் செய்துமுடித்தாக வேண்டிய லட்சியங்களும் என்னிடம் இருக்கின்றன. அதையெல்லாம் நானிருந்து நிறைவேற்றுவது நடக்காத காரியம். அடுத்த தலைமுறை அந்த லட்சியங்களை நிறைவேற்றும். அதனால்தான் எப்போதும் என்னைச் சுற்றி இளைஞர்கள் இருக்கிறார்கள்!

**நம் நாட்டுக்குத் தேவை மதப் புரட்சியா? அரசியல் புரட்சியா?**

புரட்சி என்பதை நாம் எப்போதுமே தவறாகவே புரிந்துகொள்கிறோம். புரட்சி என்றதுமே மக்கள் வீதிக்கு வந்து ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைக்கிறோம். யாரையாவது மாற்றுவதுதான் புரட்சி என்று சொல்ல முடியாது. 'நான் மாறுவதற்குத் தயாராக இருக்கிறேன்' என்பதுதான் என்னைப் பொறுத்த அளவில் புரட்சி. ஒவ்வொருவரும் 'தன்னையறிதல்' என்கிற புரட்சியில் ஈடுபட

வேண்டும். அதற்கு யாரும் வீதிக்கு வரவேண்டியதில்லை. சத்தம் போடத் தேவையில்லை. அது அமைதிப் புரட்சி. அதற்கான முயற்சியில்தான் நான் ஈடுபட்டிருக்கிறேன்...

**இட ஒதுக்கீடு பற்றி உங்கள் கருத்து என்ன?**

ஆயிரக்கணக்கான வருஷங்களாக மனிதர்களை பிறப்பால் ஏற்றத்தாழ்வு படுத்தும் அநீதி நடந்து வருகிறது. அனைவரையும் சமப்படுத்த இட ஒதுக்கீடு நிச்சயம் வேண்டும். துரதிர்ஷ்டவசமாக இட ஒதுக்கீடு அரசியலாக்கப்படுகிறது. தேர்தல் வெற்றிக்கு அதைக் கருவியாக்குகிறார்கள்.



**அரசியலில் மதம் புகுந்ததால் இந்த நிலையா?**

அரசியலும் மதமும் நம் நாட்டில் வெறும் 1,2,3... என்கிற எண்ணிக்கை சம்பந்தப்பட்டதாக இருக்கின்றன. மதமும் ஒருவித அரசியல்தான். இன்று நேற்றல்ல... பல நூற்றாண்டுகளாக அரசியலில் மதம் இருக்கிறது. ஒரு நாட்டைப் பிடிக்க ஆசைப்பட்டால், மதவாதிகளைத்தான் முதலில் அனுப்பி வைத்திருக்கிறார்கள். அதனாலேயே மதத்திற்கும் கடவுளுக்கும் தொடர்பில்லாமல் போய்விட்டது. 1,2,3... என்று நம்பருக்குப் பின்னால் போவது எப்போதுமே ஆபத்துதான்.

**அமெரிக்காவுடனான அணு ஒப்பந்தம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

அது இந்தியாவின் நலன் கருதும் சிறந்த ஒப்பந்தம் என்று சொல்ல மாட்டேன். ஆனால், நமக்கு 'நல்ல ஒப்பந்தம்' தருகிறவர்கள் யார் இருக்கிறார்கள்? நமக்கு மின்சார பிரச்னை இருக்கிறது. பெட்ரோல், நிலக்கரி போன்ற நில வளம் நம்மிடம் போதுமான அளவு இல்லை. குடிக்கவே தண்ணீர் இல்லாமல் தடுமாறும் போது மின்சாரம் தயாரிக்கும் அளவு நீருக்கு எங்கே போவது? காற்றில் மின்சாரம் எடுத்தாலும் அது பத்தாது. நம்மிடம் ஏராளமாக இருக்கும் வெயிலின் வெப்பத்தைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் தொழில்நுட்பம் இல்லை. இருக்கும் ஒரே வழி அணு மின்சாரம். அதற்கு இத்தகைய ஒப்பந்தம் தவிர்க்க முடியாதது.

ஒரு சிறந்த 'டீல்' வாங்கும் பலத்தில் நாம் இல்லை. அந்த 'டீல்' தேவைப்படுகிற பலவீனத்தில்தான் நாம் இருக்கிறோம். இப்போதும் இந்திய–அமெரிக்க அணு ஒப்பந்தத்தில் எனக்கு உடன்பாடு கிடையாது. இன்னும் கொஞ்சம் நமக்கு சாதகமாக்கியிருக்க முடியும். எப்படியிருந்தாலும் கையெழுத்தாகி முடிந்த விஷயம். அதை 'ரிஸ்க்' இல்லாமல் நிறைவேற்றுவதில்தான் கவனம் செலுத்த வேண்டும்...

**ம**தத்தின் பெயரால் நிகழும் தீவிரவாதம், அரசியலில் தனது அடையாளம், தனது பள்ளிகள், மருத்துவமனைகள் என எல்லாவற்றையும் பற்றி அடுத்த வாரமும் தொடர்கிறார் சத்குரு...

படங்கள்: **புதூர் சரவணன்**